REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

# நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily ✶ The Official Organ Of The D.P.F.

மலர் 4 | சென்னை: மார்கழி 5உ புதன் (19—12—56) ★ ★ வெளியீடு: மார்கழி 6உ வியாழன் (20—12—56) | இதழ் 165

## இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் அரிசி

### ஆடு மாடுகளுக்குப் பயன்படுத்தப்படுகின்றதாம்

சுமார் 10 மாதங்களுக்குமுன் மக்கள் சபையில் கேட்கப்பட்ட ஒரு கேள்விக்கு, நேற்று நடைபெற்ற சபைக் கூட்டத்தில் பதில் தரப்பட்டிருக்கிறது!

கடந்த பிப்ரவரி மாதம் 29-ந்தேதியன்று நடைபெற்ற மக்கள் சபைக் கூட்டத்தில் ஹெக்டா என்ற உறுப்பினர், 'இந்தியாவி

(4-ம் பக்கம் பார்க்க)

# 'கண்மூடிகளைக் கொண்டதே காங்கிரசு கூடாரம்'

## காங்கிரசார் சுயமாகச் சிந்திப்பதில்லை

### 'கண்மூடித்தனமாக தலைவர்களைப் பின்பற்றுகின்றனர்'

### மைசூர் முன்னாள் முதல்வர் அனுமந்தையா தரும் 'நற்சான்று'

சென்னை, டிச. 19—

"அனைத்திந்தியக் காங்கிரசுக் குழுக் கூட்டங்களிலும் மாநாடுகளிலும், கடந்த ஆறு ஏழு ஆண்டுக் காலமாகக் கொண்டுவரப்படும் தீர்மானங்களுக்கு மாறுபட்ட கருத்தறிவித்தலையோ, எதிர்த் தீர்மானம் கொண்டுவருவதையோ எவரும் கண்டதில்லை. தங்களுக்குத் தாங்களே சிந்திப்பதைக் கைவிட்டுவிட்டதுடன், கண்மூடித்தனமாகப் பின்பற்றுகிறவர்களாகவும் மாறிவிட்டார்கள் என்றே நான் எண்ணுகிறேன்"

இவ்வாறு, சக்கரவர்த்தி இராசகோபாலாச்சாரியாரின் 78-ம் ஆண்டு பிறப்புவிழாவிற்குத் தலைமைதாங்கிப் பேசும்பொழுது மைசூர் முன்னாள் முதலமைச்சர் அனுமந்தையா அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

நேற்று மாலை, மயிலை ரசிக ரஞ்சனி சபை அரங்கில் மேற்படி விழா கொண்டாடப்பட்டது.

அவ்விழாவின் தலைவர், ஆச்சாரியார் அவர்களின் சேவையையும், அறிவாற்றலையும் புகழ்ந்து பேசினார். மற்றும் பலரும் விழாவில் கலந்துகொண்டு பாராட்டுரை வழங்கினர்.

தலைவர் அனுமந்தையா அவர்கள், "தமிழ் நாடு கோவில்களுக்குப் புகழ் வாய்ந்திருப்பது; அதிலும், வானளாவிய கோபுரங்களுக்குப் பெயர் பெற்றிருப்பதாகும். அதற்குச் சமமாக சிறந்தவர்களைக் கொண்டிருப்பதுமாகும்.

"சென்னை ஈன்றெடுத்துள்ளது போன்ற எண்ணிக்கையில் கூர்ந்த அறிவும், சிறப்பெய்தி உள்ளவர்களாகவும் உடைய சிறந்தவர்களை, இந்தியா முழுதிலும் நான் கண்டதில்லை. அவர்கள் அனைவரிலும் ஆச்சாரியார் மிகவும் தலைசிறந்தவராவார் என்பதே எனது உண்மையான கருத்தாகும்" என்றும் குறிப்பிட்டுள்ளார்.

## கைத்தறியாளர் எதிர்ப்புக்கு டில்லி பணிவு!

### விசைத்தறித் திணிப்பைக் கைவிட முடிவு!

திருச்சூர், டிச. 18—

மாநிலங்கள் அனைத்திலும் விசைத்தறிகளைப் புகுத்துவது என்ற இந்திய சர்க்காரின் திட்டம் 'அரோகரா' ஆகிவிட்டிருக்கிறது!

விசைத்தறியைத் திணிப்பது என்று மத்திய சர்க்கார் முடிவு செய்த நாள்தொடங்கி, நாட்டின் பல்வேறு பாகங்களிலுமுள்ள நெசவாளர் பெருமக்கள், 'விசைத்தறித் திணிப்பால் கைத்தறி நலிந்துவிடும்; எங்கள் வாழ்க்கை நிலை சீர்கேடடையும்; எனவே, விசைத்தறி புகுத்தாதீர்,' என்று பலமுறை சர்க்காரைக் கெஞ்சிக் கேட்டுக்கொண்டும்கூடப் பயனில்லாது போயிற்று. என்றாலும் இப்போதாவது நெசவாளர் குடிமக்களின் வேண்டுகோளுக்கு சர்க்கார் செவிசாய்த்திருப்பதாகத் தெரிகிறது!

"எல்லா மாநிலங்களிலும் விசைத்தறியைப் புகுத்துவதென்ற இந்திய சர்க்காரின் திட்டம் கைவிடப்பட இருக்கிறது"

என்று, டில்லியில் நடைபெற்ற அகில இந்தியக் கைத்தறிக் குழுக் கூட்டம் ஒன்றில் கலந்துவிட்டுத் திருச்சூர் திரும்பிய கொச்சி குடிசைக் கைத்தொழில் கூட்டுறவு மார்க்கெட்டிங் கழகத்தின் தலைவரான சே. பாலகிருஷ்ண மாறர் அத்தகவலை வெளியிட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

டில்லியில் நடைபெற்ற அந்தக் கைத்தறிக் குழுக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட இம்முடிவை, அக்கூட்டத்தில் கலந்துகொண்ட மத்திய தொழில் அமைச்சரான மொரார்ஜி தேசாய் ஊர்ஜிதப்படுத்தினார் என்றும் அவர் கூறியிருக்கிறாராம்.

## அரிசி விலை இறங்கி வருகிறதாம்!

### அரசாங்கத்திற்குத் தகவல் கிடைத்திருக்கிறதாம்!

சென்னை, டிச. 18—

சென்னை மாநிலத்தில் இப்போது அரிசி விலை இறங்கிவருவதாகச் சர்க்காருக்குச் செய்திகள் கிடைத்தவண்ணமுள்ளனவாம்!

நியாய விலைக் கடைகளில் 'தேவையான அளவுக்கு' அரிசி கிடைக்கப் பெறச் செய்ததும், அண்மையில் அறுவடையான 'குருவை' நெற்பயிருமே இந்த விலைக் குறைவுக்குக் காரணம் என்றும் சர்க்கார் மேற்கொண்ட விசாரணைகளின்போது தெரியவந்ததாம்!

## நியாய விலைக் கடைகளிலும் அரிசி பற்றாக்குறை!

### தமிழகத்தில் நிலவும் நிலை பற்றி அமைச்சர் தகவல்

சென்னை, டிச. 18—

சென்னை மாநிலத்தில் சர்க்காரால் ஏற்படுத்தப்பட்டுள்ள நியாய விலைக் கடைகளில் தினந்தோறும் அரிசிப் பற்றாக்குறை அதிகரித்து வருவதை நிவர்த்தி செய்யும் வகையில், இம்மாதம் சென்னை சர்க்காருக்கு மத்திய சர்க்காரிடமிருந்து சுமார் 33,000 டன் அரிசி வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறதாம்!

அரிசி விலை ஏறிக்கொண்டிருக்கும் நிலையை மாற்ற சர்க்கார் மேற்கொண்ட நடவடிக்கைகள் பற்றி அமைச்சர் பக்தவத்சலம் சென்னை சட்டசபையில் பேசுகையில், மத்திய சர்க்கார், பர்மா, சீனா, அமெரிக்கா ஆகிய நாடுகளிலிருந்து தொடர்ந்து அரிசி இறக்குமதி செய்வதற்கான ஏற்பாடுகள் அனைத்தையும் மேற்கொண்டுள்ளது என்றும், விரைவில், நியாய விலைக் கடைகளின் பற்றாக்குறையைத் தவிர்த்துவிட முடியும் என்று மத்திய சர்க்கார் உறுதி கூறியிருப்பதாகவும் அறிவித்திருக்கிறார்.

சென்னை நகரிலும், மற்றுமுள்ள இடங்களிலுமுள்ள நியாய விலைக் கடைகளில், அரிசி வாங்குவதற்காக, நடுத்தர — ஏழை மக்கள் தெருக்களில் 'கியூ' வரிசையில் நின்று அவதிப்படுகின்றனர் என்று தாழ்த்தப்பட்டோர் சம்மேளனத்

## 'சுதர்சன் ஆயில் மில்ஸ்' ஏலம் விடப்பட்டது

### ரூ. 6½-இலட்சம் அரசாங்கத்திற்கு நஷ்டம்

'அரசாங்கமே ஏற்று நடத்தலாம்'

சென்னை, டிச. 18—

வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள பெரிய இரயில்வே சந்திப்பான காட்பாடியில் இருக்கும் மிகப் பிரம்மாண்டமான வனஸ்பதி தொழிற்சாலையாகிய 'சுதர்சன் ஆயில் மில்ஸ் லிமிடெட்' நேற்று, மாவட்டக் கலெக்டர் அவர்கள் முன்னிலையில் ஏலத்திற்கு விடப்பட்டது.

இது சுமார் 19 ஏக்கர் நிலத்தில் ரூ. 3 இலட்சம் பெறுமானமுள்ள 'எக்ஸ் பேலர்'களும், ரூ. 10 இலட்சம் பெறுமானமுள்ள எண்ணெய், வனஸ்பதி, ரிபைண்ட் ஆயில், சோப்பு முதலியவை தயார் செய்யக்கூடிய இயந்திரங்களும், ரூ. 1½ இலட்சம் மதிப்பிடக்கூடிய டின்கள் தயார் செய்யக்கூடிய இயந்திரங்களும், ரூ. 2 இலட்சம் மதிப்புள்ள 'பாய்லர்'களும் 'டிரான்ஸ்பார்மர்'களும், ரூ. 5 இலட்சம் மதிப்புள்ள மிகப்பெரிய தொழிற்சாலைக் கட்டிடங்களும், சேமிப்புக் கிடங்குகளும், பங்களா முதலிய கட்டிடங்களும் கொண்ட மிகப் பெரிய தொழிற்சாலையாகும்.

இதற்குப் பொதுமக்கள் பங்குகளாக ரூ. 12½ இலட்சம் போட்டிருக்கிறார்கள். அரசாங்கம் கடனாக ரூ. 10 இலட்சமும், டிபெஞ்சர்தாரர்கள் கடனாக ரூ. 2½ இலட்சமும் கொடுத்திருக்கிறார்கள். ஆக, சுமார் ரூ. 25 இலட்சம் மதிப்புள்ள இத்தகையத் தொழிற்சாலையைப் போல் பெரிய அளவில் வட ஆற்காடு மாவட்டத்தில் வேறு எதுவுமில்லை என்றே சொல்லலாம்.

ஏலம் முதலில் மொத்தமாக விடப்பட்டது; உயர்ந்த கேள்வியாக ரூ. 5 35,000-க்குக் கேட்கப்பட்டது. அந்தக் கேள்வி குறித்துக்கொள்ளப்பட்ட பிறகு, மீண்டும் 26 பாகங்களாகத் தனித்தனியாகப் பிரித்து விடப்பட்டது. அதன் தொகை ரூ. 5,48,000-க்கு வந்தது. ஏலம், கோர்ட் ஊர்ஜிதத்திற்கு உட்பட்டது என்று அறிவிக்கப்பட்டது.

ஆகவே இந்த மில்லை சர்க்காரே ஏற்று நடத்தினால் வாழ்க்கைத் தரத்தில் மிக மிகத் தாழ்ந்திருக்கும் வட ஆற்காடு மாவட்டத்தில், வேலையில்லாத் திண்டாட்டம் வெகுவாகக் குறையுமே என்று விஷயமறிந்தவர்கள் பேசிக்கொள்ளுகிறார்கள்.

(ந. கி.)

தலைவர் திரு. ஏ இரத்தினம் எம். எல். ஏ., அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

## சேலத்தில் இரும்பு-உருக்கு தொழிற்சாலை அமையாது?

### தற்போது எவ்விதத் திட்டமும் இல்லையாம்!

டில்லிப் பேரரசின் நிதி அமைச்சர் கூறுகிறார்

சேலத்தில் இரும்பு—உருக்குத் தொழிற்சாலை ஒன்று அமைப்பது குறித்து இதுவரை தெளிவான தகவல் எதும் தராதிருந்த மத்திய சர்க்கார், இப்போது தங்கள் இறுதியான கருத்தை வெளியிட்டுவிட்டனர்.

"தற்போதைக்கு சேலத்தில் இரும்பு உருக்குத் தொழிற்சாலை ஒன்று அமைப்பது குறித்து மத்திய சர்க்காரிடம் எவ்விதத் திட்டமும் இல்லை"

என்று, மத்திய நிதி, இரும்பு, உருக்கு அமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரி அவர்கள் அறிவித்துவிட்டிருக்கிறார்.

## 'மண்டலக் குழுக்கள் வெறும் அலங்கார அமைப்புகள்தான்'

### 'ஆளும் கட்சியின் கைப்பாவைகளாகவே அவைகள் பயன்படுத்திக்கொள்ளப்படும்'

மக்கள் சபையில் உறுப்பினர்கள் விளக்கம்

புதுடில்லி, டிச. 18—

"எவ்வித வேலையுமின்றி, வெறும் அலங்கார அமைப்புகளாகத்தான் இந்த மண்டலக் குழுக்கள் இருக்கும்."

"ஒவ்வொரு மண்டலக் குழுவும், அந்தந்த மாநிலத்திலுள்ள ஆளும் கட்சியின் கைப்பாவையாக்கப்பட்டுவிடும்; ஆளும் கட்சி, இந்த மண்டலக் குழுக்களையெல்லாம் தனது சொந்தக் கட்சி நலனுக்குப் பயன்படுத்திக்கொள்ளும். இவைகளினால் ஏற்படுகின்ற விளைவு, சிறுபான்மையினரின் உரிமைகளுக்குப் பங்கம் ஏற்படுவதாகும்."

மண்டலக் குழுக்கள் பற்றி மக்கள் சபையில் சில உறுப்பினர்கள் தெரிவித்துள்ள கருத்துக்களாகும் மேலே கூறப்பட்டுள்ளவை!

# நம் நாடு

திமுக தின இதழ் — ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்

சென்னை 19—12—'56 புதன்


# 'கடைசி பட்ஜெட்'

"……ஆனால், இன்னும் சில காலத்திற்கு இந்த மாநிலம், மத்திய சர்க்கார் விதிக்கும் வரிகளில் ஒரு பெரும் பங்கினை எதிர்பார்த்தும், மத்திய சர்க்காரின் தாராள உதவியை நம்பியுமே வாழ வேண்டியிருக்கும்."

இது, 'இந்து' இதழ், சென்னை சர்க்கார் சட்டசபையில் தாக்கல் செய்துள்ள 1957—58-ம் ஆண்டிற்கான இடைக்கால 'பட்ஜெட்' பற்றி எழுதியுள்ள தலையங்கத்தில் காணப்படும் முக்கியமான வாசகங்களில் ஒன்று.

இந்த வாசகம், பொதுவாக இந்த மாநில சர்க்காருக்கும் டில்லிக்கும் உள்ள உறவைத் தெளிவாக்குகிறது என்பது மட்டுமல்ல, நாம் பலகாலும் எடுத்துரைத்துப் போராடி வருகிற 'திராவிட நாடு திராவிடருக்காக வேண்டும்' என்ற இலட்சியத்திற்கான காரண விளக்கமாயும் அமைந்திருக்கிறது என்றால், அது மிகையல்ல.

பெருந்தொகை சுரக்கூடிய வரிவிதிப்புக்கான வாய்ப்புகள், அதிகாரங்கள் அத்தனையும் டில்லி சர்க்காரிடம் குவிந்திருப்பதால், பொதுவாகவே எல்லா மாநிலங்களுடையவும், குறிப்பாகத் தமிழகத்தினுடையவும் — திராவிடத்தினுடையவும் நலன்கள் அளவிட முடியாத அளவு பாதிக்கப்படுகின்றன என்பதனை, 'இந்து' இதழ், 'டில்லியின் தாராளத்தை நம்பித்தான் இந்த மாநிலம் வாழ வேண்டியிருக்கிறது' என்ற வாசகத்தின்மூலம் உணர்த்தியிருக்கிறது என்று கொண்டாலும் அது தவறல்ல.

நமது மாநிலத்தினுடைய வரவு - செலவுத் திட்டங்களைப் பற்றிய நமது பொதுவான கருத்து, நாம் கூறிவருகிற 'திராவிட நாடு திராவிடருக்கே' என்ற மூல இலட்சியத்திலிருந்து பிறந்ததாகத்தான் அமைய முடியும். அந்த வகையில், வரி விதிப்பு அதிகாரங்கள் டில்லியிடம் குவிக்கப்பட்டிருப்பதை அனுமதிக்கிற ஒரு மாநில சர்க்கார் தயாரிக்கிற எந்த ஒரு வரவு-செலவுத் திட்டமும், அது எத்தனைதான் நிபுணத்துவம் வாய்ந்ததாகவும் நிவாரணமளிப்பதாகவும் இருப்பினும், இந்த மாநில மக்களின் நலன்களுக்கு உகந்ததாக இருக்க முடியாது என்பதேயாகும்.

'இந்து' இதழ், 'டில்லியின் தாராளத்தை நம்பி இந்த மாநிலம் வாழவேண்டும்' என்று கூறுவதில் பெருமையும் திருப்தியும அடையலாம். ஆனால், நம்மைப் பொறுத்து, 'டில்லியின் தாராளத்தை நம்பி வாழும்' நிலை இந்த நாட்டு மக்களை 'வடவருக்கு அடிமைகள்' என்று பறைசாற்றுவதற்குப் போதுமானதாகும் என்பதால், அந்த நிலையே அடிப்படையான ஒரு மாறுதலுக்கு உட்பட வேண்டும் என்று கூறுகிறோம்.

இந்த நாடு வடநாட்டுடன் இணைந்திருப்பதற்கு 'உலகப் புகழ் பெற்றப் பெரிய மனிதர்'கள் முதல், சாதாரண 'அகில இந்தியரக்கள்' வரை, எத்தனை தான் நியாயங்களைக் கற்பிக்க முயன்றாலும், டில்லியின் தாராளத்தினால் மட்டுமே இந்த நாட்டு மக்களின் வாழ்வுக்கான வரவு-செலவுத் திட்டம் அமைய முடியும் என்ற நிலை அநியாயமானது என்பதை மறுத்துவிட முடியாது.

'மந்தமானது—சீர்கெட்டது—உற்சாகமற்றது' என்று 'பட்ஜெட்' பற்றிக் கருத்தறிவிக்கிற 'பரந்த நோக்கம்' படைத்தவர்களுக்கு இந்த டில்லியின் தயவை எதிர்நோக்கும் நிலை கண்ணில் படவில்லை என்று நாம் கருதவில்லை. கண்ணை உறுத்திக்கொண்டிருக்கிற இந்த நிலையைத் திரையிட்டு மூட முயற்சிப்பதில்தான் அவர்களது பரந்த நோக்கம் பளிச்சென வெளிக்குத் தெரியும் என்று அவர்கள் கருதிக்கொண்டிருக்கிறார்கள் போலும்!

'டில்லியின் தாராள'த்தை நம்பிவாழும் இந்த மாநிலத்தின் நிலையும், 'டில்லியின் தாராளம்' தென்னாட்டு மக்களுக்கு எந்த அளவு என்பதையும், இது போன்ற வழக்கமான வரவு - செலவு திட்டங்கள் மட்டுமின்றி வேறு பல சாதாரண அரசியல் நடைமுறைகளும் தெள்ளென விளக்கிக் காட்டி வந்தும், அந்தப் 'பரந்த நோக்கமுடைய'வர்கள் மௌனம் சாதிப்பதில் தான் அவர்களுடைய எச்ச சொச்ச வாழ்வு தொக்கி நிற்கிறது என்பதை அவர்களே அறிவர்.

இந்த நிலையை எடுத்துரைப்பவர்களில் 'இந்து' இதழ் ஆசிரியர்களும் பங்கு பெறுகிறார்கள் என்பது நாம கூறிவருகிற 'டில்லியின் உறவு தமிழகத்திற்குக் கூடாது' என்ற இலட்சியத்தை வலுப்படுத்துவதற்கு சிறிதளவேனும் பயன்படும்.

வெண்ணெயைக் கொடுத்துவிட்டு நெய்க்கு அலைகிற பேதமைபோல், வரி விதிப்புக்கான அதிகாரங்கள், வாய்ப்புகள் அனைத்தையும் டில்லியிடம் தந்துவிட்டுத் துண்டு விழும் தொகையைச் சரிக்கட்ட 'எசமானர்களே, எங்களுக்குக் கொஞ்சம் தாருங்கள்; ஏழைகள்மீது இரக்கம் காட்டுங்கள்' என்று இந்த மாநில சர்க்கார் கெஞ்சவேண்டி இருப்பதை, சுதந்திரம், சமத்துவம் என்ற தூய சொற்களை தினந் தவறாது தங்களது பழுப்பேறிய நாக்கினால் ஜெபித்துக் கொண்டிருக்கிற 'பரந்த நோக்கம்' படைத்தவர்கள் எப்படித்தான் சகித்துக் கொண்டிருக்கிறார்களோ? மனச்சாட்சி என்று ஒன்று இருந்தால்……………?

நாளுக்குநாள் தென்னாடு வடநாட்டினுடைய தயவை எதிர்பார்த்துத்தான் வாழ வேண்டுமென்கிற நிலை சகல துறைகளிலும வளர்ந்து வருவதை, எந்த சர்வ தேசிய கோஷங்களாலும் 'பரந்த மனப்பான்மை'களாலும் மூடி மறைத்துவிட முடியாது என்பதை அவர்களுக்கு அடித்துரைக்கத்தான் செய்யும்.

சட்டசபையில் தாக்கல் செய்யப்பட்டுள்ள காமராசர் சர்க்காரின் கடைசி 'பட்ஜெட்' குறித்துப் பொதுவான நமது கருத்தையே நாம வலியுறுத்துவதைத் தவிர பல கூறுகளாக அதனைப் பிரித்து, கருத்தறிவிக்க வேண்டியது அத்தனை அவசியமானது என்று நாம் கருதவில்லை. என்றாலும், புது வரி விதிப்புகள் இல்லை; சர்க்கார் ஊழியருக்கு அவர்கள் எதிர்பார்ப்பதைவிட மிக மிகக் குறைவான—அவர்களைக் கிஞ்சிற்றும் திருப்திப்படுத்தாத சிறு நிவாரணம் அளிக்கப்படுகிறது. கிராம அதிகாரிகளுக்கு சிற்சில கண்துடைப்பு சலுகைகள் தரப்படுகின்றன; கிறிஸ்துவர்களான தாழ்த்தப்பட்டவர்களுக்கு இனி இதர தாழ்த்தப்பட்டவர்களைப் போல கல்விச் சலுகை கிடைக்கும் என்பனபோன்ற 'பட்ஜெட்'டின் அம்சங்கள், நெருங்கிக் கொண்டிருக்கிற தேர்தலை மனதில்கொண்டு இடம் பெறச் செய்யப்பட்டவை என்பதிலும் எவருக்கும் சந்தேகம் வேண்டாம் என்று நமமால் கூறாமலிருக்க முடியவில்லை.

வரவு ரூ. 52 கோடியே 64 இலட்சத்து 63 ஆயிரம; செலவு ரூ. 57 கோடி, 70 இலட்சத்து 84 ஆயிரம; துண்டு விழும தொகை ரூ. 5 கோடி 6 இலட்சத்து 21 ஆயிரம என்ற 'பட்ஜெ—'டிற்குத் துண்டு விழும தொகையை எப்படி சரிக்கட்டுவது என்பதை தேர்தலுக்குப் பிறகு வரப்போகும சர்க்கார் கவனித்துக் கொள்ளும் என்று விளக்கம கூறப்பட்டிருக்கிறது. ஆனால் வரப்போகும சர்க்கார், டெல்லிக்கும் சென்னைக்கும் இப்போதுள்ள உறவே நீடிக்குமானால் இந்தத் தொகையை, இந்த மாநில மக்களிடமிருந்தே மேலும் பல வரிகள் மூலமும், 'கட்டாயக் கடன்'கள் மூலமும் வசூலிக்கும் என்றே எதிர்பார்க்கலாம்.

இப்போதே அந்த வரி விதிப்புகள், 'கட்டாயக் கடன்'கள் ஆகியவற்றிற்கான திட்டங்கள் பற்றி அறிவிக்கப்படாமலிருப்பதற்கு, வரப்போகும் தேர்தல் தான் முக்கியமான காரணம என்பதை யூகமுடையவர்கள் அறிவர்.

---

## தெரிந்து கொள்ளுங்கள்!

சென்னை, டிச. 18—

நடைமுறை ஆண்டில் மொத்தம 4,13,768 கேளிக்கைகள் சென்னை மாநிலத்தில் நடைபெற்றனவாம்.

சென்ற ஆண்டில் மொத்தம் 2,67,342 கேளிக்கைகள் தான் நடைபெற்றனவாம்.

கிண்டியில் நடைபெறும் குதிரைப் பந்தயத்தின் மூலம் அரசாங்கத்திற்கு ரூ. 93,37,492 வருமானம் கிடைத்ததாம்.

## வசூலிக்கப்பட்ட தொகை எவ்வளவு தெரியுமா?

சென்னை மாநிலத்தில் 1955-56ம் ஆண்டில் சில திரைப்பட காட்சி கொட்டகைகள் புதிதாக இயங்குவதாலும், நடைமுறை ஆண்டில் மக்கள் விரும்பிய நல்ல படங்கள் திரையிடப்பட்டதாலும், இந்த ஆண்டில் அதிகப்படியான 'கேளிக்கை வரி' வசூலிக்கப்பட்டுள்ளதாம.

சென்ற ஆண்டில், ரூ. 75,81,199 வசூலிக்கப்பட்டதாம்.

இந்த ஆண்டில் மொத்தம் ரூ. 94,34,157 வசூலாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது; இந்தத் தொகையில் ரூ. 93,27,472 வசூலிக்கப்பட்டுள்ளது; பாக்கி வசூலிக்கப்பட வேண்டிய தொகை ரூ 1,06,374, என்று அறிக்கை ஒன்றில் கூறப்பட்டிருக்கிறது.

---

## ஐ. நா. சபையில் ரஷ்யா எதிர்ப்பு!

நியூயார்க், டிச. 17—

கம்யூனிஸ்டு சீனாவை ஐ. நா. சபையில உறுப்பினராகச் சேர்த்துக்கொண்டாலன்றி, பாதுகாப்புச் சபையின் உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகமாக்கும் யோசனையைத் தாங்கள் ஒப்புக்கொள்ள இயலாது என்று சோவியத் ரஷ்யா திட்டவட்டமாக அறிவித்துவிட்டதாம்!

---

## அரசாங்கத்தின் கேடுபயக்கும் கொள்கை

### தொழில் முன்னேற்றத்தைப் பாதிக்குமென எச்சரிக்கை

திருவனந்தபுரம், டிச. 17—

"தொழில்துறையில் முன்னேற்றமடையவேண்டும் என்று விரும்பும் அரசாங்கம் அத்தியாவசியமான மின்சாரத்தின்மீது அதிக வரி விதிக்கிறது; இந்தக் கேடு பயக்கும் கொள்கை, நாட்டின் தொழில் முன்னேற்றத்தையே பாதிக்கும். தொழில் முன்னேற்றத்திற்கு அதிக அவசியமானது மலிவான மின்சார சக்தியேயாகும்"

என்று, டாக்டர் ஏ. இராமசாமி (முதலியார்) அவர்கள் கூறியுள்ளார்.

திரு-கொச்சி மின் பொறியாளர் நிறுவனத்தில் பேசுகையில் அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"கிராமப் பகுதிகளுக்கு மின்சாரத்தை மலிவாக அளித்து கிராமப்புற மக்களின் வாழ்வை உயர்த்துவதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

"கேரளத்தைப் பொறுத்தமட்டில் மின்சாரத்தை உற்பத்தி செய்ய பல நீர்வீழ்ச்சிகள் உண்டு; அவைதப் பயன்படுத்திக்கொண்டு கேரளத்தின் தொழில் முன்னேற்றத்திற்குப் பாடுபடவேண்டும்."

---

## ஆட்சியின் ஊழல் தெளிவாகிறது?

### ஏராளமான இரும்புகள் கேட்பாரற்றுக் கிடப்பானேன்?

பம்பாய், டிச. 18—

நாட்டின் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் போதிய இரும்பு இல்லாததால் தடைபட்டுக் கிடக்கிறது என்று கூறப்படுகையில், பம்பாயிலுள்ள ஆஜிபந்தரில் ஏராளமான இரும்புப் பாலங்கள் கேட்பாரற்றுக் கிடந்துவருகின்றனவாம்!

கடந்த மூன்று மாதகாலமாக அவை மழையில் நனைந்து துருப்பிடித்துக் கிடப்பதுடன் போக்குவரத்திற்கும் அவை இடையூறாக உள்ளனவாம்!

வழக்கமான நடைமுறை விதியிலுள்ள சிக்கல்களே இதற்குக் காரணமாக இருக்கலாம்!

இது குறித்து தக்க விசாரணை நடத்த வேண்டும் என்று விவரம் தெரிந்தவர்கள் கருதுகின்றனராம்!

---

## குஷ்ட நோயாளிகள்

### இந்தியா முழுமையிலும் 13 - இலட்சம் பேர்களா?

ராஞ்சி, டிச. 18—

இந்தியா முழுமையிலும் மொத்தம் 13 இலட்சம் குஷ்டரோகிகள் இருப்பதாக மத்திய சுகாதாரக் குழுக் கூட்டத்தில் மதிப்பிடப்பட்டிருக்கிறது.

தீவிர நடவடிக்கையின் மூலம் இந்த வியாதியைத் தடுக்க முயற்சி செய்யப்பட வேண்டுமெனறும், சிகிச்சை செய்வதற்கு அதிகப்படியான நிலையங்களை நிறுவ வேண்டுமெனறும் வற்புறுத்தப்பட்டிருக்கிறது.

ஒரு இடத்திலிருந்து மற்றோரிடத்திற்குக் குஷ்டரோகிகள் போய்வருவதால் இந்த வியாதி அதிகமாகப் பரவுகிறது என்றும், இதைத் தடுக்க அகில இந்திய ரீதியில் ஒரு சட்டம் நிறைவேற்றப்பட வேண்டுமென்றும் குழு கேட்டுக்கொண்டுள்ளது.

---

## வர்த்தகத் துறையில் விமானப் போக்குவரத்து

### உலக நாடுகளிடை போட்டி?

நியூயார்க், டிச 19—

ஜெட் விமானங்களின் வேகம் நிபுணர்களையே திகைக்க வைத்துவிட்டது. எதிர்காலத்தில் இவைதான் வேகமாகச் செல்லக்கூடிய பெரிய பிரயாணிகள் விமானங்களாகத் திகழப் போகின்றனவாம்!

இன்றுவரை, 242 விமானங்களுக்கு உலகிலேயே மிகப் பெரிய விமானக் கம்பெனிகள் அமெரிக்காவிலுள்ள மூன்று நிறுவனங்களுக்கு ஆர்டர் கொடுத்திருக்கின்றனவாம்

மிகவும் விலை உயர்ந்ததும் முற்றிலும் மாறுபட்டதுமான இந்த விமானங்களை விமானக் கம்பெனிகள் ஏன் வாங்குகின்றன? வர்த்தகத் துறை விமானப் போக்குவரத்தில் போட்டிகள் அதிகமாக இருப்பதாலும், பொதுவாக ஏற்பட்டு வரும் முன்னேற்றத்திற்கு அனுகூலமாகவும் இவைகளை விமானக் கம்பெனிகள் வாங்கித்தான் ஆக வேண்டும்.

'போயிங்', 'டக்ளஸ்' போன்ற ஜெட் விமானங்கள் மணிக்கு 550-லிருந்து 600 மைல் வரை பறக்கும சக்தி வாய்ந்தவை; அதாவது, இன்று இருக்கும் பிஸ்டன் என்ஜின் விமானங்களைவிட மணிக்கு 200-லிருந்து 250 மைல் அதிகமாகப் பறக்கமுடியும். சிறியதான 'கொன்வெயா' ஜெட் விமானம மணிக்கு 607 மைல வேகத்தில் பறக்கும் என்று கூறப்படுகிறது. இன்றைய விமானங்களில் ஒன்று, இரண்டுதடவை அட்லாண்டிக்கைக் கடந்தால் ஒரு ஜெட் விமானம் மூன்று தடவை கடக்கும்.

---

## ஹங்கேரி அறிஞர்களுக்கு 6-இலட்சம் டாலர் உதவி

### ராக்பெல்லர்நிறுவனம்அளிக்கிறது

நியூயார்க், டிச. 19—

இங்கு அகதிகளாக வந்துசேரும் ஹங்கேரிய விஞ்ஞானிகள், அறிஞர்கள், கலைஞர்கள், மாணவர்கள் ஆகியோருக்கு முதலாவது நன்கொடையாக 6-இலட்சம் டாலரை ராக்பெல்லர் நிறுவனம் ஒதுக்கியிருக்கிறது. ஹங்கேரிய மக்களின் துன்பத்தில் இந்த நிறுவனம் 'ஆழ்ந்த கவலை'யைச் செலுத்தியுள்ளது.

---

## தொழிலாளருக்குக் குடியிருப்பு வசதி

### டில்லிப் பேரரசு வழங்கும் மானியத்தின் இலட்சணம்!

புதுடில்லி, டிச 18—

தொழில்துறைத் தொழிலாளருக்கு சர்க்காரின் நிதி உதவியுடன் வீடு கட்டிக்கொடுக்கும் திட்டத்தின்கீழ், மொத்தம் 1,174 குடியிருப்புகளையும் 150 கடைகளையும் கட்டுவதற்காக 1956 அக்டோபர் மாதத்தில் இந்திய சர்க்கார் கடன் தொகைகளாகவும் உதவித்தொகைகளாகவும் மொத்தம ரூ 26,14,429 அனுமதித்துள்ளனர்; இந்தத் தொகை பஞ்சாப், பம்பாய், மத்தியப் பிரதேசம், லக்னோ, அசாம், பெங்களூர் ஆகிய பகுதிகளுக்கு மட்டுமே தரப்பட்டிருக்கிறது

---

## இந்து மதத்தைக் கை கழுவினர்!

### 50,000 பேர் புத்த மதத்தைத் தழுவினர்

நாசிக், டிச. 18—

மறைந்த டாக்டர் அம்பேத்கார் ஆதரவாளர்களான சுமார் 50,000 பேர் இங்குகூடி, மறைந்த மாபெரும் தலைவருக்கு இறுதி வணக்கம் செலுத்திவிட்டு, இந்து மதத்திலிருந்து விலகி புத்த மதத்தில் சேர்ந்தனர்.

இந்த மதமாற்றத்தை, முறைப்படி ஆனந்த கவுசல்யன் என்பவர் செய்து வைத்தார்.

# செய்திச் சுருள்

★

### 44-வது வட்டம் திரு.வி.க. பகுத்தறிவு மன்றம்

2—12—56 காலை 9 மணிக்கு சென்னை மயிலை திரு வி. க. பகுத்தறிவு மன்றத்தில் புதிய தமிழக அமைப்பு விழா நடைபெற்றது. தோழர்கள் பலர் சொற்பொழிவாற்றினர். சில தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

### சென்னை 7-வது வட்டம் அழகிரி மன்றம்

5—12—56 பிற்பகல் 2 மணிக்கு மேற்படி பணிமனையில் நடைபெற்ற மன்ற உறுப்பினர் கூட்டத்தில் மன்றப் பொருளாளர் தோழர் டி. ஜார்ஜ் விலகல் கடிதம் ஏற்றுக்கொள்ளப்பட்டும், அவரது பணிகளுக்கு நன்றி தெரிவித்தும், 24-11-56ல் நடைபெற்றப் பொதுக்கூட்டத்திற்கு உதவி செய்த பொதுமக்கள் தோழர்கள், அனைவருக்கும் நன்றி தெரிவித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### விருதுநகர் வள்ளுவர் சொற்பயிற்சி மன்றம்

3-12-56 காலை $10\frac{1}{2}$ மணிக்கு தோழர் சி. மு சோ. வன்னியராசன் தலைமையில் நடைபெற்ற மன்றச் செயற்குழுக் கூட்டத்தில். அடுத்த திங்களில் ஆண்டு விழாக் கொண்டாடுவதெனவும் அதை ஒ டி. மலர்' வெளியிடுவதெனவும் முடிவு செய்யப்பட்டதுடன் மன்ற வரவு-செலவும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

### மாங்காவு—பாலக்காடு முற்போக்குவாலிபர்மன்றம்

1—12—56 இரவு 10 மணிக்கு, மேற்படி மன்றப் பணிமனையில் தோழர் பி சந்திரன் தலைமையில் நடைபெற்ற மன்ற உறுப்பினர் கூட்டத்தில் விரைவில் பொதுக் கூட்டம் நடத்தி தி. மு. கழகத் தேர்தல் நிதி அளிப்பதென்றும் நிதி திரட்டக் குழு ஒன்று தேர்ந்தெடுத்தும் முடிவு செய்யப்பட்டது

### சென்னை 4-வது வட்டம் இளைஞர் முன்னேற்ற மன்றம்

25-11-56 காலை 10 மணிக்கு, மேற்படி மன்றப் பணிமனையில் தோழர் நடேசன் தலைமையில் நடைபெற்றக் கூட்டத்தில், மன்ற நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டதுடன், தி. மு. கழகத் தேர்தல் நிதி திரட்டக் குழு ஒன்றும் அமைக்கப்பட்டது.

### கொழும்பு அண்ணா பகுத்தறிவு மன்றம்

8—11—56-ல், தோழர் எம். உமர் தலைமையில் நடைபெற்ற மேற்படி மன்றச் செயற்குழுக் கூட்டத்தில் முக்கியத் தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன

* * *

25—11—56-ல் நடைபெற்ற உறுப்பினர் கூட்டத்தில் தோழர் எம் எஸ் குமாரைத் தலைவராகக் கொண்ட நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

### கொழும்பு அழகிரி மன்றம்

2—12—56ல், தோழர் மா. சு. முருகசாமி தலைமையில் நடைபெற்ற மேற்படி மன்ற உறுப்பினர் கூட்டத்தில், புதிய செயற்குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

### மக்கள் மன்றம்

27—11—56ல் நடைபெற்ற சென்னை பெத்துநாய்க்கன் பேட்டை மக்கள் மன்றச் செயற்குழுக் கூட்டத்தில் அரியலூர் இரயில் விபத்தில் இறந்தவர் குடும்பத்தாருக்கு அனுதாபம் தெரிவித்தும் மற்றும் பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

### சென்னை சிங்காரவேலர் மன்றம்

25—11—56 காலை 10 மணிக்கு சென்னை ஓட்டேரி சிந்தனை சிற்பி சிங்காரவேலர் மன்றத்தில் தோழர் பெ. தங்கவேல் தலைமையில் நடைபெற்றக் கூட்டத்தில் புதிய நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்

### சென்னை பூங்காநகர் அறிவியக்க மன்றம்

22—11—56 இரவு 8 மணிக்கு நடைபெற்ற சென்னை பூங்காநகர் (27-வது வட்டம்) அறிவியக்க மன்ற உறுப்பினர் கூட்டத்தில் மன்றப் புத்தாண்டு நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

### மதுரை முத்தமிழ் மன்றம்

9—12—56 காலை $10\frac{1}{2}$ மணியளவில் மதுரை முத்தமிழ் மன்ற உறுப்பினர் கூட்டம் தோழர் அ சோமசுந்தரம் தலைமையில் நடைபெற்றபோது, வருகிற ஜனவரியில் பொங்கல் விழா, மன்ற முதலாண்டு விழாக் கொண்டாடுவதென்றும், விழாவின்போது தி மு. கழகத் தேர்தல் நிதி வழங்குவதென்றும் முடிவு செய்யப்பட்டது. டாக்டர் அம்பேத்கார் மறைவுக்கு அனுதாபமும் தெரிவித்துக்கொள்ளப்பட்டது.

### திருவப்பூர் தமிழ் மன்றம்

18-11-56 காலை 10 மணிக்கு. தோழர் மா. சுந்தரேசன் தலைமையில் நடைபெற்ற மேற்படி மன்றப் பொது உறுப்பினர் கூட்டத்தில் 22—7—56-ல் நடைபெற்ற பொதுக்கூட்ட வரவு-செலவுகள் ஏற்றுக்கொள்ளப்பட்டும் தி மு. கழகத் தேர்தல் நிதி அளிப்பதென்றும் முடிவு செய்யப்பட்டதுடன், மற்றும் சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### இடையர்பாளையம் பகுத்தறிவு மன்ற துவக்கம்

11—11—56 காலை 10 மணிக்கு தோழர் இரங்கசாமி தலைமையில் மேற்படி படிப்பகம் துவக்கப்பட்டது. தோழர் செகநாதன் கழகக் கொடியேற்றினர். தோழர் தங்க மாணிக்கம் மன்றத்தைத் திறந்து வைத்தார்.

### ஆனைமலையில் கலா மன்றம் அமைப்பு

29—11—56 இரவு 9 மணிக்கு. ஆனைமலை மாரியம்மன்கோயில் மண்டபத்தில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் மேற்படி மன்றம் அமைக்கப்பட்டு, தோழர் ஏ. கே. இராமசாமியைத் தலைவராகக் கொண்ட மன்ற நிர்வாகக் குழு தேர்ந்தெடுக்கப்பட்டது. இத்திங்கள் இறுதியில், மன்றத் துவக்க விழா நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

### எமனேசுபுரம் முற்போக்கு நாடகக் கலா மன்றம்

4—11—56 மாலை $6\frac{1}{2}$ மணிக்கு மேற்படி மன்ற 2-வது ஆண்டு விழா திரு டி. சீனிவாசன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் பலர் பேசினர். இரவில் கட்டபொம்மன்' நாடகமும் நடிக்கப்பெற்றது.

### கவுந்தப்பாடி தையல் தொழிலாளர் சங்கம்

6—12—56 இரவு $8\frac{1}{2}$ மணிக்கு. தோழர் எஸ் ஆர் முத்து துணிக் கடையில், தோழர் இரா. துரை தலைமையில் நடைபெற்ற மேற்படி சங்கக் கூட்டத்தில், கவுந்தபபாடியில் தொழிலாளர் கலைன முன்னிட்டு அவர்களுக்கு வாரம் ஒரு நாள் விடுமுறை வழங்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்டும் அரியலூர் இரயில் விபத்தில் மாண்டவர் குடும்பத்தாருக்கு அனுதாபம் தெரிவித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### ஆமதாபாத்கே.வி.கே.சாமி நாடக மன்றம்

4—12—56 மாலை 4 மணிக்கு முனிசிபல் சால் எண் 102, இல்லத்தில் தோழர் மதுரைச்செழியன் தலைமையில் மேற்படி நாடக மன்றம் அமைக்கப்பட்டு, தோழர் கே. வி கே. சாமியின் உருவப் படம் திறந்து வைக்கப்பட்டது. தோழர்கள் பலர் சொற்பொழிவாற்றியதுடன், இறுதியில் முக்கியத் தீர்மானங்கள் சில நிறைவேற்றப்பட்டன.

### திருநெல்வேலி கே.வி.கே. சாமி நினைவு மன்றம்

29—11—56 இரவு 10 மணிக்கு நெல்லை சந்திப்பு சிந்தப்பூந்துறை மேற்படி மன்ற உறுப்பினர் கூட்டம் தோழர் சோதி இராசு தலைமையில் நடைபெற்றபோது தோழர் சோதி இராசவைச் செயலாளராகக் கொண்ட மன்ற நிர்வாகக் குழு தேர்ந்தெடுக்கப்பட்டது. இரு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### கண்டமானடி கே. வி. கே. சாமி மன்றம்

3—12—56 மாலை 4 மணிக்கு நடைபெற்ற மன்றப் பொது உறுப்பினர் கூட்டத்தில் தோழர் காமதேவ் அவர்களைச் செயலாளராகக் கொண்ட நிர்வாகக் குழு தேர்ந்தெடுக்கப்பட்டது. தி. மு. கழகத் தேர்தல் நிதி திரட்டி அனுப்புவதென்றும், தோழர் இளவழுதி துணைவியார் விசாலாட்சி மறைவுக்கு அனுதாபம் தெரிவித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### சென்னை கே. வி. கே. சாமி நினைவு மன்றம்

2—12—56 இரவு 8 மணிக்கு நடைபெற்ற சென்னை 4-வது வட்டம் கே. வி. கே சாமி நினைவு மன்றச் செயற்குழுக் கூட்டத்தில் விரைவில் தேர்தல் நிதி அளிப்பதென முடிவு செய்யப்பட்டது.

### மன்னார்குடி கே. வி. கே. சாமி மன்ற சொற்பயிற்சிக் கூட்டம்

5—12—56 இரவு 9 மணிக்கு தோழர் சே. ரா. மதியழகன் தலைமையில் நடைபெற்ற மேற்படி மன்றச் சொற்பயிற்சிக் கூட்டத்தில் தோழர்கள் பலர் 'தேர்தலும் நமது கடமையும்' எனும் தலைப்பில் சொற்பொழிவாற்றினர்.

### அய்யனாபுரம் கே. வி. கே. சாமி நினைவுப் படிப்பகம்

2—12—56ல் அய்யனாபுரம் (மதுரை மாவட்டம்) மேற்படி படிப்பக நிர்வாகிகள் தேர்வுக் கூட்டம் நடைபெற்றது. தோழர் ஆ. சன்னாசியைச் செயலாளராகக் கொண்ட நிர்வாகக் குழுவினர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தைத் திங்களில் படிப்பகத் துவக்க விழா நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

### பெரியகுளம் கே. வி. கே. சாமி நினைவுப் படிப்பகம்

5—11—56 இரவு 10 மணிக்கு, தெற்கு புதுத்தெரு, எண் 49, இல்லத்தில் தோழர் ஏ. எஸ் அனீபா தலைமையில் நடைபெற்ற படிப்பக அமைப்புக் குழுக் கூட்டத்தில், படிப்பக நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தோழர்கள் பலர் 'படிப்பகமும் அதன் நலனும்' என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றினர்.

### சென்னை— தண்டையார்பேட்டை கே. வி. கே. சாமி படிப்பகம்

29—11—56 மாலை $6\frac{1}{2}$ மணியளவில், தோழர் டி. பி. சுந்தரம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், 'தற்கால அரசியல் நிலை' என்ற தலைப்பில் தோழர்கள் பலர் சொற்பொழிவாற்றினர்.

### காஞ்சீபுரம் கே.வி.கே.சாமி நினைவு படிப்பக அமைப்பு

10—12—56 இரவு 10 மணிக்கு காஞ்சி பிள்ளையார்பாளையம் மண்டபத் தெரு, தோழர் கே. முனுசாமி இல்லத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் கே. வி கே சாமி நினைவுப் படிப்பகம் திறக்கப்பட்டு தோழர் எம். கோவிந்தராசவைச் செயலாளராகக் கொண்ட நிர்வாகக் குழு தேர்ந்தெடுக்கப்பட்டதுடன் இத்திங்கள் 30-ந் தேதியில், படிப்பகத் துவக்க விழா நடத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

### திண்டுக்கல்லில் நெடுஞ்செழியன் படிப்பகம்

24-11-56ல், தோழர் தி. திருப்பதி தலைமையில் நடைபெற்ற திண்டுக்கல் நகர தி. மு. கழக உறுப்பினர் கூட்டத்தில், நாகல் நகரில் நெடுஞ்செழியன் படிப்பகம் ஆரம்பிக்க முடிவு செய்யப்பட்டு, நிர்வாகிகளும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். 16-ந் தேதி படிப்பகத் திறப்பு விழா நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

### மதுரை பகுத்தறிவுப் படிப்பகம்

18—11—56 பகல் 11 மணிக்கு மேற்படி படிப்பகத்தில் தோழர் இராமானுசம் தலைமையில் நடைபெற்ற உறுப்பினர் கூட்டத்தில் தி. மு. கழகத் தேர்தல் நிதி திரட்டல், ஆண்டு விழா ஆகியவை குறித்து முடிவு செய்யப்பட்டதுடன், தேர்தல் நிதிக் குழு ஒன்றும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

### திருக்குறளாருக்குப் பாராட்டு விழா

3—11—56-ல், திண்டிவனம் திருவள்ளுவர் கல்வி வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் தமிழவேள் பி. டி. இராசன் தலைமையில் திருக்குறளாருக்குப் பாராட்டு மலர் வழங்கும் விழா நடைபெற்றது தோழர் ஏ கோவிந்தசாமி எம்.எல்.ஏ., மற்றும் பலர் பாராட்டுரை வழங்கினர்

### வியாசர்பாடி திருவள்ளுவர் நூல் நிலையம்

25—11—56 காலை நடைபெற்ற சென்னை வியாசர்பாடி திருவள்ளுவர் நூல் நிலையப் பொது உறுப்பினர் கூட்டத்தில் தோழர் கே. எஸ். கே. சாமியைச் செயலாளராகக் கொண்ட புதிய செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

### பசுமலைப்பட்டியில் கிராம முன்னேற்றக் கழகத் துவக்கம்

24—11—56ல், பசுமலைப்பட்டியில் தோழர் க. தங்கராசு தலைமையில் கிராம முன்னேற்றக் கழகம் திறக்கப்பட்டு, தோழர் இராசகோபால் அவர்களைச் செயலாளராகக்கொண்ட நிர்வாகக் குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

## 'மகளிர்விழா' நடத்துவதற்கு திட்டம்

**கண்காட்சிக்கும் இடமுண்டு**

அடுத்த ஆண்டு ஜுன் மாதக் கடைசி வாரத்தில் 'மகளிர் விழா' கொண்டாட, பிரிட்டனிலுள்ள மாதர் சங்கங்கள் முடிவு செய்திருக்கின்றன.

விழாவையொட்டி, லண்டன் வெம்பிளியில் கண்காட்சி ஒன்றும் நடைபெறும்.

பிரிட்டனிலுள்ள மாதர் சங்கங்களின் உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை 35,00,000.

### கோளத்தில் உணவுத் தானியக் கடைகள்

புதுடில்லி, டிச. 19—

உணவுத் தானியங்களை விற்பனை செய்வதற்காகக் கோளமாநிலத்தில் இதுவரை 198 மொத்த விற்பனைக் கடைகளும், 2,938 சில்லறை விற்பனைக் கடைகளும் திறக்கப்பட்டிருக்கின்றன. மொத்தம் 41 உணவுத் தானியக் கிடங்குகள் இருக்கின்றன. இவற்றில் 19 கிடங்குகள் மத்திய சர்க்காருக்குச் சொந்தமானவை; மற்றவை, மாநில சர்க்கார் கிடங்குகளாகும்.

## கே. வி. கே. சாமி

**கொலை வழக்கு விசாரணை**

திருநெல்வேலி, டிச. 18—

அத்தக்குடி கே. வி. கே. சாமி கொலை வழக்கு விசாரணை, சனவரி 2-ந் தேதியன்று திருநெல்வேலி செஷன்ஸ் நீதிமன்றத்தில் நடைபெறும் என்று முன்பு அறிவிக்கப்பட்டிருந்தது.

இப்போது அந்த வழக்கு சனவரி 7-ந் தேதி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

### சென்னை ஊ. பு. அ. சவுந்திரபாண்டியனார் நினைவுப் படிப்பகம்

2—12—56ல், சென்னை ஜுனை மேற்படி படிப்பகப் பொது உறுப்பினர் கூட்டம் தோழர் டி. கே. இளங்கோ தலைமையில் நடைபெற்றபோது, வருகிற பொங்கல் விழாவின்போது தி. மு. கழகத் தேர்தல் நிதி அளிப்பதெனவும், மற்றும் பல முடிவுகளும் மேற்கொள்ளப்பட்டன.

### மதுரை—கல்லக்குடி நடராசன் நினைவுபடிப்பகம்

2-12-56 பிற்பகல் 3 மணிக்கு, தோழர் கே. பி. பாண்டியன் தலைமையில் நடைபெற்ற மேற்படி படிப்பகச் செயற்குழுக் கூட்டத்தில், தோழியர் விசாலாட்சி-இளவழுதி மறைவுக்கும் அரியலூர் விபத்தில் இறந்தோருக்கும் அனுதாபம் தெரிவித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

## குறிஞ்சிப்பாடி வேலாயுதம் உயர்நிலைப்பள்ளி

### நிர்வாகிகளுக்கு அண்ணா பாராட்டுரை

தென்னார்க்காடு மாவட்டம் குறிஞ்சிப்பாடியிலுள்ள ச. கு வேலாயுதம் உயர்நிலைப் பள்ளியின் நிர்வாகி தோழர் எஸ் கே. சம்பந்தம், மற்றும் ஆசிரியர்கள் ஆகியோரின் அன்பழைப்புக்கிணங்கி 14-12-56 பிற்பகல் 3 மணிக்கு அண்ணா அவர்கள், தோழர்கள் என். வி நடராசன், கே. ஏ. மதியழகன், ஏ. கோவிந்தசாமி, எம். எல். ஏ, ஆகியோருடன் சென்று பார்வையிட்டார்.

தோழர் எஸ். கே. சம்பந்தமும் மற்ற நிர்வாகிகள், ஆசிரியர்களும் மனமார வரவேற்றுப் பள்ளியைச் சுற்றிப் பார்வையிடச் செய்தனர்.

பின்னர், பள்ளித் திடலில், தி மு. கழகத் துணைப் பொதுச் செயலாளர் என். வி நடராசன் அவர்கள் தலைமையில், பள்ளித் திடலில் சிறப்புக் கூட்டம் ஒன்று நடைபெற்றது.

முதலாவதாகத் தோழர் கே. ஏ. மதியழகன் பேசியபின், அண்ணா அவர்கள் உயர்பள்ளியின் அமைப்பையும், மாணவர்களின் கட்டுப்பாட்டையும், ஆசிரியர்களின் ஆற்றலையும் எண்ணிப் பார்க்கும் போது விரைவில் இந்த உயர்நிலைப் பள்ளி கல்லூரியாகத் திகழவேண்டுமென்றும், அதற்கு அனைவரும் ஒத்துழைப்புத் தர வேண்டும் என்றுக் கேட்டுக்கொண்டதுடன் மறைந்த நற்பண்பாளர் வேலாயுதம் அவர்களின் குடும்பம், கல்வி வளர்ச்சி குறித்துக் காட்டிவரும் அக்கரையைப் பாராட்டினார்கள்.

தலைவர் முடிவுரைக்குப்பின் தோழர் எஸ். கே. சம்பந்தம் நன்றி கூறினார்.

பின்னர் அண்ணா அவர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் விருந்துபசாரம் நடைபெற்றது

2,50,000 பவுன் மதிப்புள்ள

## அச்சு இயந்திரங்கள்

பிரிட்டனிடமிருந்து இந்தியா கொள்முதல் செய்கிறது

பம்பாயில் நிறுவப்படுமாம்!

இந்திய பாங்கி நோட்டுக்களை அச்சிடுவதற்குப் பிரிட்டனில் பிரபல அச்சு இயந்திர உற்பத்தி செய்யும் நிறுவனமொன்றிடமிருந்து சுமார் 2,50,000 பவுன்கள் மதிப்புள்ள மல்டி-கலர் ஆப்-செட் லிதோ,' அச்சு இயந்திரங்களை இந்திய சர்க்கார் கொள்முதல் செய்திருக்கிறார்கள். இந்த இயந்திரங்கள் பம்பாயிலுள்ள சர்க்கார அச்சகத்தில் நிறுவப்படும்.

அகில இந்திய கதர்—கிராமக் கைத்தொழில்கள் போர்டின்கீழ் குடிசைத் தொழில் ரீதியில் ஏற்படுத்தப்பட்டுள்ள 37 தீக்குச்சித் தொழிற்சாலைகளும், நாள் ஒன்றுக்கு 45 குரோஸ் தீப்பெட்டிகள் உற்பத்தி செய்யக்கூடியவை.

---

இந்தியாவிலிருந்து……

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

விருந்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் அரிசியை இறக்குமதி செய்யும் நாடுகள் அந்த அரிசியை பெரும்பாலும் எதற்கு உபயோகப்படுத்துகின்றன?' என்று கேட்டபோது, அதுபற்றின விவரங்களை விரைவில் தெரிவிப்பதாகக் கூறியிருக்கிறார், அப்போது பதிலளித்த மந்திரி!

நேற்று நடைபெற்ற கூட்டத்தில், இதற்குப் பதிலளித்த அவர் 'அந்த நாடுகளில் எல்லாம் இறக்குமதி செய்யப்படுகின்ற இந்திய அரிசி பெரும்பாலும் ஆடு மாடுகளுக்கு உணவாகப் பயன்படுத்தப்படுகிறது' என்று தெரிவித்திருக்கிறார்.

---

அருப்புக்கோட்டை கே. வி. கே. சாமி நினைவுப்படிப்பகதிறப்புவிழா

21—12—56 மாலை 7 மணிக்கு அருப்புக்கோட்டை கே. வி. கே. சாமி நினைவுப் படிப்பகத் திறப்பு விழாப் பொதுக்கூட்டம், வெள்ளைக் கோட்டை தெற்கு ரத வீதியில தோழர் எம். எஸ் இராமசாமி தலைமையில் நடைபெறும் தோழர்கள் ஈ. வெ. கி. சம்பத், சி.வ. இரத்தினம் ஆகியோர் சொற்பொழியாற்றுவர்.

---

சிம்சன் & குரூப் கம்பெனித் தொழிலாளர்கள் சார்பில்

## தி. மு. கழகத் தேர்தல் நிதி அளிப்புக் கூட்டம்

20—12—56 வியாழன் மாலை 6-மணிக்கு நேப்பியர் பூங்காவில் (சிந்தாதிரிப்பேட்டை)

★

தலைவர்: **வி. எஸ். கோவிந்தராசன்**

பேசுவோர்:

## அண்ணா, என். வி. நடராசன், எம். ஏ. கரிகாலன்

---

## சென்னை அரசாங்கம் உணர்வு பெறுகிறது!

சென்னை, டிச 18—

போதிய கல்லூரிகளும் பள்ளிகளும் இல்லாததால், மாற்று முறைப்படி கல்வி கற்பிக்க சென்னை அரசாங்கம் விரும்பவில்லையாம்!

மேலும் நிபுணர்கள்கூட இந்த மாற்று முறைக்குப் பாதகமாகவே சிபாரிசு செய்துள்ளனராம்!

'எனவே, புதிய தொழில் கல்லூரிகளையும் நிறுவ சென்னை அரசாங்கம் முடிவு செய்துள்ளது,' என்று சட்டசபையில் அமைச்சர் சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

---

## சென்னை கிளைக் கழகச் செயலாளர்களுக்கு

வேண்டுகோள்

★

தேர்தல் நிதி வாரத்தில் திரட்டிய நிதியை, 20—12—56 அன்று சென்னை நேப்பியர் பார்க்கில் நடைபெறும் நிதி அளிப்புக் கூட்டத்தில் அண்ணா அவர்களிடம் செலுத்துமாறு சென்னையிலுள்ள கிளைக் கழகச் செயலாளர்களைக் கேட்டுக்கொள்கிறேம்.

—தலைமைக் கழகம் (தி மு. க)

---

## கிளைக் கழக நிர்வாகிகளின் கவனத்திற்கு!

பொதுச்செயலாளரின் அறிக்கைப்படி, தேர்தல் வாரத்தில் திரட்டிய தொகையைப் பொதுக்கூட்டம் நடத்தி அதன் மூலம் அளிப்பதென்று சில கிளைகள் எண்ணியிருப்பதாகத் தெரியவருகிறது. இத்தொகையைப் பொதுக்கூட்டங்களுக்கோ, வேறு எந்த நிகழ்ச்சிகளுக்கோ பயன்படுத்தாமல், உடனே முழுத் தொகையையும் தலைமை நிலையத்திற்கு அனுப்பிவைக்குமாறு எல்லா கிளைக் கழக நிர்வாகிகளையும் வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறோம். மாவட்ட நிர்வாகிகளும் இதனை கவனித்து ஆவன செய்ய வேண்டுகிறோம்.

—தலைமைக் கழகம் (தி. மு. க.)

---

இரண்டாவது திட்ட காலத்தில் பால் தொழில் அபிவிருத்தித் திட்டங்களின் மூலதனச் செலவுகளுக்கு மொத்தம் ரூ. 21 கோடி ஆகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.

---


## பார்க்பேர் பொருட்காட்சி: 56-57

**சென்னை எஸ். ஐ. ஏ. ஏ. திடலில்**

**23-12-56 முதல் 20-1-57 வரை**

★

★ ரேக்லா, சைக்கிள், ஓட்டப் பந்தயங்கள், சர்க்கஸ், ஓவியக்கலை, தந்திரக் காட்சிகள்!

★ ஈ. வி. சரோஜா, குசலகுமாரி, ராதா ராணி, சாயி-சுப்புலட்சுமி —நாட்டியங்கள்

★ கே. பி. சுந்தராம்பாள் —பாட்டு

★ எம். ஜி. இராமச்சந்திரன், சிவாஜி கணேசன், கே. ஆர். இராமசாமி, எம். ஆர். இராதா, எஸ். எஸ். இராசேந்திரன், கே. ஏ. தங்கவேலு, என். எஸ். கிருஷ்ணன், சூரி பாபு —& குழுவினரின் நாடகங்கள்

★

10—1—57 அன்று **அண்ணா** அவர்கள் நடிக்கும் **சந்திரமோகன்** —நாடகம்

★ மற்றும் பல இனிய காட்சிகள்!

**நுழைவுக் கட்டணம்: ரூ. 0—5—0**

எம். எஸ். மோகன்—காண்டிராக்டர்


---

## தேர்தல் செலவுகள்

டில்லிப் பேரரசு நிர்ணயம்

புதுடில்லி, டிச. 18—

தேர்தல் சட்டத்தில் இந்தியப் பேரரசு ஒரு மாறுதலைச் செய்திருக்கிறது.

நடைபெறப்போகும் பொதுத் தேர்தலில் போட்டியிடுவோர் எவ்வளவு செலவு செய்யலாம் என்பதற்கு வரம்பு கூறப்பட்டிருக்கிறது.

**சென்னை:**

சட்டசபைக்கு ஒரு உறுப்பினர் தொகுதிக்குப் போட்டியிடுபவர் ரூ 9,000 வரை செலவு செய்யலாம். இரு உறுப்பினர் தொகுதியில ரூ. 14,000 வரை செலவு செய்யலாம்.

**ஆந்திரம்:**

சட்டசபைக்கு ஒரு உறுப்பினர் தொகுதிக்கு ரூ 7,000; இரு உறுப்பினர் தொகுதிக்கு ரூ. 12,000.

**கேரளம்:**

சட்டசபைக்கு ஒரு உறுப்பினர் தொகுதிக்கு ரூ. 7,000; இரு உறுப்பினர் தொகுதிக்கு ரூ. 12,000.

**மைசூர்:**

சட்டசபைக்கு ஒரு உறுப்பினர் தொகுதிக்கு ரூ. 6,000; இரு உறுப்பினர் தொகுதிக்கு ரூ 11,000.

டில்லி பாராளுமன்றத்திற்குப் போட்டியிடும் உறுப்பினர்கள் எந்த மாநிலத்தில் போட்டியிட்டாலும் ஒரே வரம்புக்குள் செலவிட வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

பாராளுமன்ற ஒரு உறுப்பினர் தொகுதிக்கு ரூ. 25,000-மும் இரு உறுப்பினர் தொகுதிக்கு ரூ 35,000-மும் செலவு செய்யலாம்.

---

## தேர்தல் நிதி தாரீர்!

★

வரவு:

| | ரூ. அ. பை |
|---|---|
| முன் (17—12—56) இதழ்ப்படி. .... | 9,048—3—9 |
| சென்னை 4-வது வட்டம கே. வி. கே. சாமி மன்றம்—உண்டியல் மூலம் வசூல் .... | 25—4—0 |
| பெங்களூர் சிறப்புக் கூட்டம்—தோழர் க. அன்பழகன் மூலம் .... | 87—1—3 |
| கோலார் ஆண்டர்சன்பேட்டை பொதுக் கூட்டம—தோழர் க. அன்பழகன் மூலம் .... | 20—10—0 |
| என். கே. பொன்னையா, சாத்தூர் ... | 6—0—0 |
| பூலாங்குளம் தி மு. கழகம் (நெல்லைமாவட்டம்) .... | 5—0—0 |
| நா. குருப்பணன் (லோயர்பாரலை எஸ்டேட்) .... | 25—0—0 |
| விருதமபட்டு தி. மு. கழகப் பொதுக்கூட்டம் —தோழியர் சத்திபவாணி-முத்து மூலம் .... | 37—8—0 |
| சென்னை 19-வது வட்டம் தி. மு. கழகம் .... | 45—0—0 |
| சென்னை 37-வது வட்டம் தி. மு. கழகம் .... | 79—0—9 |
| மீஞ்சூர் தி. மு. கழகம் .... | 40—5—3 |
| சென்னை 17-வது வட்டத் தி. மு. கழகம் .... | 60—1—9 |
| பேலூர் தோழர்கள் கரு. இராமையா, முத்தலீபு, செல்லையா, க. சுப்பையா, சி. காதர்கனி ஆகியோரிடமிருந்து .... | 5—0—0 |
| தனுஷ்கோடித் தோழர் ஏ. பெருமாள் மூலம் .... | 2—0—0 |
| கோலாலம்பூர் தோழர்கள்: கே. எஸ். சின்னையா மூலம்:— .... | 172—0—0 |

—ரூ 25 கொடுத்தவர்: கே. எஸ். சின்னய்யா

—ரூ. 10 கொடுத்தவர்கள்: கே. இராமலிங்கம், டி சண்முகம்.

—ரூ. 7—8—0 கொடுத்தவர்கள்: எஸ். மாதவி, எஸ். பன்னீர்செல்வம், எஸ் செல்வநாயகம்

—ரூ. 5 கொடுத்தவர்கள்: பி. சையத் முகம்மது, கே. ஏ ராஜாராம் மோகன்ராய், சே. எம். துரைசாமி, ஏ. ஆர் ஐயப்பன், ஆர். கே. சாமி, எஸ். அமானுல்லா, எம். கார்மேகம், பி. பாலகிருஷ்ணன்.

—ரூ. 3—12—0 கொடுத்தவர்கள்: எஸ். இரத்தினம், எம். வி முத்து.

—ரூ 3 கொடுத்தவர்கள்: கே. மாரிமுத்து, வி. எஸ் சுப்பய்யா, பி. டி. பெருமாள், எஸ். சின்னய்யா, பி காளியப்பு, சின்னய்யா, மோகன்தாஸ்.

—ரூ. 1—8—0 கொடுத்தவர்கள்: ஏ. என் பொன்னம்பலம், எம். தாஸ், என். நாராயணன்; ஆர் கே. சுப்பய்யா, எஸ். முனியாண்டி, எஸ். தாஸ். எம். மாத்துரையார், டி. இராசன், வி. கே. கணேசன், ஜெ ஜோசப், சி. இராமதாஸ், பி. கணபதி, பி. மணியம், எஸ். கருப்பய்யா, என். நடேசன், என். இலக்குமணன், இராயப்பன், வேளாங்கண்ணி கே. பூவலிங்கம், ஜோசப், பி. முனியாண்டி, எஸ் ஏ. அன்பானந்தன், எஸ். எம். கமாலுதீன், ப. வைத்தியலிங்கம்

ஆக மொத்தம் ரூ 9,658—2—9

குறிப்பு:—நிதி அனுப்பி வைக்கவேண்டிய முகவரி:—

பொதுச்செயலாளர்—தி. மு. கழகம்
'அறிவகம்', இராயபுரம், சென்னை-13

---

## தி. மு. கழகத் தேர்தல் நிதி

மலேயா தொழிலாளர்கள் காணிக்கை

திராவிட முன்னேற்றக் கழகத் தேர்தல் நிதிக்கென, மலேயாவில் சிலாங்கூர் மாகாணத்தில் நிலக்கரிச் சுரங்கப் பகுதியான பத்து ஆராங் என்ற ஊரில் வாழும் தொழிலாளத் தோழர்கள் நிதி திரட்டி ரூ. 190 தோழர் ப. சி. பிச்சை அவர்கள் மூலம் அனுப்பியுள்ளனர். நிதி கொடுத்த தோழர்கள்: இராசு, பலராமன், மு. வீரபுத்திரன், உ. சின்னப்பன், நடராசன், எஸ் முனியாண்டி, என். எஸ். மணியம், இராசு, கு துரைராசு, இரா. தர்மலிங்கம, கா மருதமுத்து, சதாசிவம், எம். சவரி, சி. ஆறுமுகம், ச. கர்ணையா, எம். மணியம், அ. கு. சாமி, இரெ. இராமையா, அ. குப்புசாமி, கோ. நடேசன், பத்துமலை, வெ பழனி, வி. சுப்பிரமணியம், நல்லு, ஆண்டி, ப. சி. பிச்சை.

* * *

ஆத்தூர் கூட்டத்தில் நிதியளிப்பு

சேலம் மாவட்டத்தில் தோழர்கள் ஈ வெ கி. சம்பத், எம். பி சுப்பிரமணியம் ஆகியோரது சுற்றுப் பயணத்தின்போது ஆத்தூரில் நடந்த 29—9—56ல் தோழர் ஜி. பி. சோமசுந்தரம் தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தேர்தல் நிதியாக ரூ. 6—11—0 தரப்பட்டது.

விவரம்: பனமடல் தி. மு. கழகம்: ரூ. 1-1-0; கூடமலை தி மு. கழகம் ரூ 1-1-0; தம்மம்பட்டி தி. மு. கழகம் ரூ 1-2-0; உலிபுரம் தி. மு கழகம் ரூ. 1-4-0; அம்மம்பாளையம் தி மு. கழகம் ரூ 1-2-0; சின்னசேலம் தி. மு. கழகம் ரூ. 1-2-0; சின்னசேலம் தி. மு கழகம் ரூ. 1-1-0.

---

சொற்பயிற்சிக் கூட்டம்

20—12—56 மாலை 6 மணிக்கு சென்னை 16-வது வட்ட தாண்டம் வராயன்பிள்ளை தெரு, எண் 22, திருவள்ளுவர் முன்னேற்றக் கழக இல்லத்தில் தோழர் தனபால் தலைமையில் 'மேடைப்பேச்சு' என்ற தலைப்பில் தோழர்கள் பலர் பேசுவர்.

* * *

திருமண விழாவில் தேர்தல் நிதி

13—12—56 காலை, சென்னை தங்கசாலை தெரு, எண் 330 இல்லத்தில், தோழர் மயிலை சிட்டிமுத்து தலைமையில், தோழர் மு நடராசன் — தோழியர் இராமலிங்கம் திருமணம் நடைபெற்றது. தோழர்கள் என். வி. நடராசன், சி. ஆர். பாலசுந்தரம், முத்துவேல், தோழியர் சத்தியவாணிமுத்து ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். தி. மு. கழகத் தேர்தல் நிதிக்கு மணமக்கள் சார்பில் ரூ. 5 அன்பளிப்பு தரப்பட்டது.

---

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர்: இரா. செழியன் எம். ஏ.